**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 40/2015**

**Deposition of P.W.** 2

Name : திரு. குணராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 12.11.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது மண்டைக்காடு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை மது விலக்கு பிரிவில் முதல்நிலை காவலராக பணியாற்றி வந்தேன். 23.10.2003ம் தேதி பகல் 13.15 மணிக்கு நானும், உதவி ஆய்வாளர். திரு. ராஜாராம், முதல் நிலை காவலர் திரு. இன்பராஜ் ஆகியவர்கள் ரோந்து பணி செய்து திக்கணங்கோடு சந்திப்பில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். வடக்கிலிருந்து தெற்காக ஒரு பசஜாஜ் ஸ்கூட்டர் வாகனம் ஒன்று வந்து கொண்டிருந்தது. அதை நிறுத்தி சோதனை செய்ய வாகனத்தைஓட்டியவர் கால் பக்கம் ஒரு சாக்குமூடை இருந்தது பின்னால் பயணம் செய்தவர் மடியில் ஒரு சாக்குமூடை இருந்தது, சாக்குமூடைகளை அவிழ்த்து பார்க்கும் போது சுமார் 500 மில்லி பிடிக்கக்கூடிய சுமார் 125 பாக்கெட்டுகள் ஒரு சாக்கு பையிலும் மற்றொன்றிலும் 125

பாக்கெட்டுகளும் மாம்பட்டை கஷாயம் இருந்தது. அதை பார்த்த போதுஅதற்கு எவ்வித அரசு அனுமதியும் இல்லை. அந்த கஷாய பாக்கெட்டுகளில் இருந்ததை நான்கு பாட்டில்களில் மாதிரிக்கு எடுத்து கைப்பற்றினோம். மீதமுள்ளதை சம்பவ இடத்தில் கொட்டி அழித்து விட்டோம். அந்த அத்தாட்சியில் நானும், முதல்நிலை காவலர் திரு. இன்பராஜ் கையொப்பம் செய்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

திக்கணம்கோடு சந்திப்பு அதிக ஆட்கள் நடமாடும் பகுதி என்றால் சரிதான். பாக்கெட்டுகளில் மது கஷாயம் தான் இருந்தது. மது கஷாயம் ஆயுர்வேத தயாரிப்பு என்றால் சரிதான். ஆனால் அதற்கு அரசு உரிமம் வேண்டும். அந்த உரிமத்தை மருந்து கட்டுப்பாட்டு அலுவலர் வழங்கவேண்டும் என்றால் சரிதான். மதுவிலக்கு தொடர்பான பொருட்களை ஆய்வாளர் படிநிலைக்கு குறையாத நபர்கள் கையாள வேண்டும் என்றால் சரிதான். நான் பணியில் இருந்ததை காட்ட டயரியை காவல் ஆய்வாளரிடம் தரவில்லை. அத்தாட்சியில் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான் ஆனால் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக தவறுதலாக எழுதப்பட்டது. மதுகஷாயம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்பதை நான் விசாரிக்கவில்லை. மதுகஷாயம் குடித்து பாதிக்கப்பட்டதாக யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சொன்ன நாளில்ரோந்து பணியில் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்து அவரிடமிருந்து பொருள் எதுவிம் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

Name : கோபலன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 12.11.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மார்த்தாண்டத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமைக்காவலராக பணியாற்றிய போது நீதிமன்றத்திலிருந்து 2 பாட்டில்கள் திரவத்தைதிருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகம் கொண்டு சென்று ஒப்படைத்தேன். ரசீது பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை